# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | **II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR** |
| Case No. | : | **SC 73/2020** |
| Posecution Witness | : | **PW 4** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரபு | Caste | : | |
| Father's Name | : | சுப்பிரமணியன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 35 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 28.02.2023.**

***1 முதல் 11 எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** : -

நான் திருவையாறு பணவெளி காளியம்மன் கோயில்தெருவில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு வெட்டாறில் ஒரு ஆண் பிரேதம் கிடப்பதாக சொன்னார்கள். நானும் வேடிக்கைபார்க்க போனேன்.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**:

என்னை போலிசார் விசாரித்தபோது 12.06.2019 காலை 9.00 மணியளவில் பணவெளி கிராமத்தில் கீழ மாரியம்மன் கோயிலுக்கு தென்புறம் முக்கால் கிலோமீட்டர் தூரத்தில் வெட்டாற்றில் 22 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபர் வாயில் துண்டு கட்டப்பட்டு தலையில் இரத்தக்காயத்துடன் இருந்வரை நான் பார்த்தேன் என்றும் அந்த இறந்த நபர் கருப்பு கலர் பனியன் கருப்பு கலர் ஜீன்ஸ் பேன்ட் பச்சை கலர் முழுக்கைசட்டை வைகிங் ஜட்டி அணிந்திருந்தார் என்றும் மேலும் பிணம் கிடந்த இடத்தில் சுமார் வடக்கிலிருந்து 100 அடி தூரத்திலிருந்து இரத்தக்கரை மணலில் ஆங்காங்கே கிடந்தது என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தார்கள் என்றும் அப்போது மநான் அவ்வாறு சொல்லியிருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**1 முதல் 6 மற்றும் 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

கூட்டத்தில் சுமார் 500 பேர் இருந்திருப்பார்களா என்றால் 2, 3 ஊர்க்காரர்கள் இருந்திருப்பார்கள். கும்பல் அதிகமாக இருந்ததால் போலிசார் கிட்டே போய் பார்க்கவிடவில்லை. நான் ஆற்றுக்கு எதிர் கரையில் இருந்தேன். போலிசார் என்னை சாட்சியாக அழைத்ததால் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் ஆமாம்.

**7 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) அ. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | **II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR** |
| Case No. | : | **SC 73/2020** |
| Posecution Witness | : | **PW 5** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரெங்கபாசியம் | Caste | : | |
| Father's Name | : | சண்முகம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 28.02.2023.**

***1 முதல் 11 எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** : -

நான் திருவையாறு தாலுக்கா பணவெளி கீழத்தெருவில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் வேலை பார்க்கிறேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. 2019 ம் ஆண்டில் ஒருநாள் வெட்டாற்றில் பிரேதம் கிடப்பதாக சொன்னார்கள். ஊரே நின்று கொண்டிருந்தது நான் வெட்டாற்றின் வடகரையில் நின்று பார்த்தேன். நான் பிரேதத்தை பார்க்கவில்லை.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**:

என்னை போலிசார் விசாரித்தபோது 12.06.2019 காலை 9.00 மணியளவில் பணவெளி கிராமத்தில் கீழ மாரியம்மன் கோயிலுக்கு தென்புறம் முக்கால் கிலோமீட்டர் தூரத்தில் வெட்டாற்றில் 22 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபர் வாயில் துண்டு கட்டப்பட்டு தலையில் இரத்தக்காயத்துடன் இருந்வரை நான் பார்த்தேன் என்றும் அந்த இறந்த நபர் கருப்பு கலர் பனியன் கருப்பு கலர் ஜீன்ஸ் பேன்ட் பச்சை கலர் முழுக்கைசட்டை வைகிங் ஜட்டி அணிந்திருந்தார் என்றும் மேலும் பிணம் கிடந்த இடத்தில் சுமார் வடக்கிலிருந்து 100 அடி தூரத்திலிருந்து இரத்தக்கரை மணலில் ஆங்காங்கே கிடந்தது என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தார்கள் என்றும் அப்போது நான் அவ்வாறு சொல்லியிருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**1 முதல் 6 மற்றும் 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பிரேதம் வெட்டாற்றின் தென்கரையில் இருந்தது. போலிசாரும் தென்கரையில்தான் இருந்தார்கள். எங்களை பிரேதத்தை கிட்டே சென்று பார்க்கவிடவில்லை.

**7 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) அ. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | **II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR** |
| Case No. | : | **SC 73/2020** |
| Posecution Witness | : | **PW 6** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகையன் | Caste | : | |
| Father's Name | : | வைத்தியலிங்கம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 50 க்கு மேல் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 28.02.2023.**

***1 முதல் 11 எதிரிகள் வருகை.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** : -

நான் திருவையாறு பணவெளி ஹரிஜனத்தெருவில் குடியிருக்கிறேன். நான் கூலிவேலை பார்க்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. 2 வருடத்திற்கு முன்பு வெட்டாற்றின் தென்கரையில் கூட்டமாக இருந்தார்களே என்று நானும் போய் பார்த்தேன். பிரேதம் கிடந்தது.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**:

என்னை போலிசார் விசாரித்தபோது 12.06.2019 காலை 9.00 மணியளவில் பணவெளி கிராமத்தில் கீழ மாரியம்மன் கோயிலுக்கு தென்புறம் முக்கால் கிலோமீட்டர் தூரத்தில் வெட்டாற்றில் 22 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் நபர் வாயில் துண்டு கட்டப்பட்டு தலையில் இரத்தக்காயத்துடன் இருந்வரை நான் பார்த்தேன் என்றும் அந்த இறந்த நபர் கருப்பு கலர் பனியன் கருப்பு கலர் ஜீன்ஸ் பேன்ட் பச்சை கலர் முழுக்கைசட்டை வைகிங் ஜட்டி அணிந்திருந்தார் என்றும் மேலும் பிணம் கிடந்த இடத்தில் சுமார் வடக்கிலிருந்து 100 அடி தூரத்திலிருந்து இரத்தக்கரை மணலில் ஆங்காங்கே கிடந்தது என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தார்கள் என்றும் அப்போது நான் அவ்வாறு சொல்லியிருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**1 முதல் 6 மற்றும் 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**7 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) அ. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.